செ.வெ.எண்: 495/2020 நாள் : 19.07.2020

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் ஆகியோர், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்கள் தலைமையில், கன்னியாகுமரி மாவட்டத்தில், கொரோனா தொற்றுநோய் தடுப்பு பணிகள் முன்னேற்றம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ஆலோசனை நடத்தினார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகளை கண்காணிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள், அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று, கொரோனா தடுப்பு பணிகள் குறித்து, ஆய்வு செய்து, தடுப்பு பணிகளில் ஈடுபடும் அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் தகுந்த அறிவுரை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்த, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் ஆகியோர், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில், கொரோனா தொற்றுநோய் தடுப்பு பணிகள் முன்னேற்றம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 18.07.2020 அன்று ஆலோசனை நடத்தினார்கள்.

நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கொரோனா தொற்றுநோய் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள், அவர்களுக்கு வழங்கப்படும் உணவுகள் குறித்தும், ஒவ்வொரு சிகிச்சை மையங்களிலும் நோயாளிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது குறித்தும் ஆய்வு செய்தார்கள். மேலும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள், கொரோனா தொற்றுநோய் பரவாமல் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்து, அனைத்துத்துறை அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்திற்குபின், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : -

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் சார்பாக, தொடர்ந்து சிறப்பான கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மிகவும் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகபட்சமாக 18 இலட்சத்து 4 ஆயிரத்து 174 கொரோனா வைரஸ் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், கொரோனா வைரஸ் தொற்றுலிருந்து 1 இலட்சத்து13 ஆயிரத்து 856 பேர் இதுவரை குணமாகியுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் கர்ப்பிணி பெண்களை, குழந்தை பிறப்பதற்கும் 10 நாள்கள் முன்னால் கொரோனா வைரஸ் பரிசோதனைகள் செய்து, அதில் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்ட கர்ப்பிணி பெண்களை பிரசவ வார்டில் தனிமைப்படுத்தி, உரிய சிகிச்சை அளித்து, தாயையும் சேயையும் குணபடுத்தும் அளவிற்கு, நமது மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை 70 ஆயிரத்திற்கும் அதிமான அளவில் கொரோனா வைரஸ் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது என்பது மிகப்பெரிய விஷயமாகும். கொரோனா வைரஸ் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போதுதான், நோயினால் பாதிக்கப்பட்டவர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அவர்களை குணப்படுத்த முடியும். வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது, நமது நாட்டில் கொரோனா வைரஸ் நோயினால் பாதிக்கபட்டு இறந்தவர்களின் இறப்பு விகிதம் மிகவும் குறைவாக உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, அனைத்து மாவட்ட நிர்வாகமும், அனைத்துத்துறை அலுவலர்களும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன் என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் பேசியதாவது :-

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியோடு, அம்மா வழியில் செயல்பட்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மிகச்சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் கொரோன தொற்று சமூக பரவல் ஏற்படமால் இருக்க, நாம் ஒவ்வொருவரும் பொது இடங்களில் செல்லும் போது, முககவசங்களை அணிந்து, சமூக இடைவெளியினை கடைப்பிடிப்பது மிக அவசியம். மேலும், பொதுமக்கள் அனைவரும் வெளியில் சென்று வரும்போதும், அலுவலக பணிகளில் ஈடுபடும் போதும், அடிக்கடி கைகளை நன்றாக கழுவி, சுத்தப்படுத்த வேண்டும். தமிழ்நாடு அரசு வரைமுறைப்படுத்தியுள்ள கபசுர குடிநீர், நிலவேம்பு குடிநீர், சத்தான உணவுகளை எடுத்துக்கொண்டு, நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மேலும், வெளிநபரையோ, உறவினர்களையோ சந்திக்கும்போது அவர்கள் அருகில் செல்லாமல் சமூக இடைவெளியை கடைபிடிப்பதன்மூலம், சமூக பரவல் ஏற்படாமல் தடுக்கலாம். கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டுவரும் தமிழக அரசுடன், பொதுமக்களும் இணைந்து செயல்பட்டால் தமிழ்நாட்டில் கொரோனா தொற்றை ஒழிக்க முடியுமென மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் பேசினார்கள்.

நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்கள் பேசியதாவது :-

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றுவரும் தமிழக அரசு, தமிழகம் முழுவதும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மிகச்சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து நிதிகளையும் மாநில நிதியிலிருந்து செய்து கொடுக்கவும், கொரோனா நோயாளிகளுக்கு சத்தான, நோய் எதிர்ப்பு திறன்கொண்ட உணவுகளை வழங்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில், மாவட்ட அ.இ.அ.தி.மு.க சார்பில், கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்திடும் வகையிலும், அவர்களுக்கு சத்தான உணவு வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலும், நோய் எதிர்ப்பு சக்தியினை உருவாக்கும் மூலிகையினால் தயாரிக்கப்பட்ட முட்டையுடன் கூடிய கோழி பிரியாணி தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு,

சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியினை உருவாக்கும் மூலிகையினால் தயாரிக்கப்பட்ட முட்டையுடன் கூடிய கோழி பிரியாணி வழங்கப்படுகிறது. இது புரோட்டின் சத்து குறைவாக உள்ள நோயாளிகளுக்கு புரோட்டின் சத்து தேவையான அளவு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், இதற்கென்று தனி திறமை பெற்ற மூலிகை சமையல் தெரிந்த வல்லுநர்கள் மூன்று பேர் வாயிலாக, சீரான முறையில், தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. கொரோனா நோய் தான் நமக்கு எதிரி, கொரோனா நோயாளிகள் இல்லை என்பதை உணர்ந்து செயல்படும் மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் எனது பாராட்டினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்கள் பேசினார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்கள் ஆகியோர், கோட்டார் மறை மாவட்ட ஆயர் மேதகு நசரேன்சூசை அவர்களை, நாகர்கோவில், கோட்டார் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில், 18.07.2020 அன்று சந்தித்து, கன்னியாகுமரி மாவட்ட மீனவ கிராமங்களில் செய்துவரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, ஆலோசனை நடத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்கள் ஆகியோர், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனைக்கு சென்று, அங்குள்ள கொரோனா அவசர சிகிச்சை பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்து, பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

நடைபெற்ற ஆய்வு கூட்டங்களில், திரு.எஸ்.ஆஸ்டின் எம்.எல்ஏ, திரு.ஜெ.ஜி.பிரின்ஸ் எம்.எல்.ஏ, திரு.செ.ராஜேஷ் குமார் எம்.எல்.ஏ, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வி.பத்ரி நாராயணன், இ.கா.ப., நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.ஆஷா அஜித் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலை) திருமதி.பஞ்சவர்ணம், மாவட்ட ஆவின் பெருந்தலைவர் திரு.எஸ்.ஏ.அசோகன், மாவட்ட அரசு ரப்பர் வளர்ப்போர் கூட்டுறவு விற்பனை சங்கத்தலைவர் திரு.டி.ஜாண்தங்கம், மாவட்ட ஊராட்சித்தலைவர் மரு.எஸ்.மெர்லியண்ட் தாஸ், சார் ஆட்சியர் (பத்மநாபபுரம்) திருமதி.ஷரண்யா அறி இ.ஆ.ப., மாவட்ட கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் திரு.எஸ்.கிருஷ்ணகுமார், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.ஜே.ஜாண் பிரிட்டோ, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.போஸ்கோ ராஜ்,உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.